## ஈரோடு மாநகராட்சி

## மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

## (திருவள்ளுவராண்டு 2042 மார்கழித் திங்கள் 11-ஆம் நாள்)

2011-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27–ஆம் தேதி (27.12.2011) செவ்வாய்க் கிழமை காலை 11.00 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.

– – –

# நடவடிக்கைகள்

1. மரியாதைக்குரிய துணை மேயர் திரு. கே.சி. பழனிசாமி அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்

- மண்டலம்-I வீரப்பன்சத்திரத்தில் அலுவலகம் இட வசதி மற்றும் நிர்வாக வசதி குறைவாக இருப்பதால் சூரியம்பாளையம் பேரூராட்சி அலுவலகம் உள்ள இடத்தில் புதிய அலுவலக கட்டிடம் அமைத்து அவ்விடத்தில் மண்டலம்-I-றினை செயல்பட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**237. மரியாதைக்குரிய துணை மேயர் திரு. கே.சி. பழனிசாமி அவர்கள் முன்மொழிய வணக்கத்துக்குரிய மேயர் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

- ஈரோடு மாநகராட்சி மண்டலம்-I சூரியம்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் தற்பொழுது 25 HP மின்மோட்டார் (1702 lpm x 31m Head) தலைமை நீரேற்று நிலையத்தில் தற்போது செயல்பட்டு வருகிறது. சுத்திகரிப்பு நீரேற்று நிலையத்தில் பெருகிவரும் மக்கள் தொகையை கருத்தில் கொண்டு ஜுடிசியல் காலனி செல்லும் மின்மோட்டார் கூடுதலாக அமைத்து (750 lpm x 22m Head) செயல்பட்டு வருகிறது. இதனால் நீர்ப்பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் கூடுதலாக தேவைப்படும் நீரினை கருத்தில் கொண்டு புதிய மின்மோட்டார் (2800 lpm x 31m Head) தலைமை நீரேற்று நிலையத்தில் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**238. மரியாதைக்குரிய துணை மேயர் திரு. கே.சி. பழனிசாமி அவர்கள் முன்மொழிய வணக்கத்துக்குரிய மேயர் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**2.** ஈரோடு மாநகராட்சி பாதாள சாக்கடைத்திட்டத்தில் சிப்பம்-5க்கான கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் அமைக்கும் பணியை ஒப்பந்ததாரரே வடிவமைத்து, கட்டிடம் கட்டி இயக்கி 5 வருடம் பராமரித்து பின்னர் மாநகராட்சி வசம் ஒப்படைக்க ஒப்பந்தப்புள்ளி 07.1.11ல் கோரப்பட்டதில் ஒன்பது ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர். இவர்களின் தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அலுவலக தொழில்நுட்பக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகளை ஆய்வு செய்த தொழில்நுட்ப குழு தமது 15.2.11ந் தேதிய கூட்ட நடவடிக்கையில் வரப்பெற்ற ஒன்பது ஒப்பந்ததாரர்களில் கீழ்க்கண்ட ஐந்து பேர் தகுதியானவர்கள் எனவும் இவர்களின் ஒப்பந்தவிலை விகிதங்களை திறக்க அனுமதித்ததன்பேரில் கடந்த 28.2.11ல் ஒப்பந்த விலை விகிதம் திறக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் விபரம் | சுத்திகரிப்பு நிலையம் வடிவமைத்து கட்டமைப்பு செய்து இயக்கி வழங்க ஆகும் விலை விகிதம் ரூ | ஐந்தாண்டு காலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்தல் ஆகியவற்றின் விலை விகிதம் ரூ | மொத்தம் மற்றும் சுத்திகரிப்பு நிலைய வடிவமைப்பு தொழில் நுட்பம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | M/s.ராம்கி இன்பரா, ஹைதராபாத் | 182277655.00 | 55889652.00 | 238167307.00 (MBBR) Technology |
| 2 | M/s.யு.இ.எம் இந்தியா, நொய்டா | 326000000.00 | 125000000.00 | 451000000.00 (MBBR) Technology |
| 3 | M/s.டி.டெக் புராஜக்ட்ஸ், சென்னை | 228352008.25 | 65576423.84 | 293928432.09 (SBR) Technology |
| 4 | M/s.விஸ்வா இன்பரா, ஹைதராபாத் | 214914940.00 | 54902460.41 | 269817400.41 (ASD) Technology |
| 5 | M/s.எஸ்.எம்.எஸ்.இன்பரா, நாக்பூர் | 429999998.00 | 80000005.00 | 510000003.00 (MBBR) Technology |

அலுவலகக் குறிப்பு-

1) பெறப்பட்ட விலை விகிதங்கள் உத்தேச மதிப்பில் அவர்களே வடிவமைத்து கட்டிமுடித்து இயக்குதல் மற்றும் 5 வருடம் பராமரித்து வழங்க வேண்டுமென்பதால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.ராம்கி இன்பரா ஸ்ரெசர், ஹைதராபாத் என்பவர் ரூ.238167307/-க்கு வழங்கியுள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியை நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகத்தில் உள்ள ஒப்பந்தப்புள்ளி நிலைக்குழுவிற்கு அனுப்பி ஒப்புதல் பெற மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் கூடுதலாகும் தொகையினை அரசு மானியம், நிதி நிறுவன கடன் பெறவும் அல்லது மாநகராட்சி நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**பா.சா.தி/6459/10**

**239. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**குறைந்த ஒப்பந்தப்புள்ளி மாமன்றத்தின் அங்கீகரிக்கும் வரம்பை விட அதிகமாக உள்ளதால் சென்னை நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகத்தில் உள்ள ஒப்பந்தப்புள்ளி நிலைக்குழுவிற்கு அனுப்பி ஒப்பந்தப்புள்ளியில் முடிவு பெற்ற பின்னர் மீண்டும் மாமன்றத்துக்கு பொருள் வைத்து ஒப்புதல் பெற்ற பின் மேல் நடவடிக்கை தொடர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது. 54ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.சபுராமாமின்ஹாஜ் அவர்கள் ஆட்சேபனை செய்தார். மேலும் 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி அவர்கள் ஆட்சேபனை செய்தார்.**

**3.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதி 2,3,4,5 மற்றும் வீரப்பன்சத்திரம் பகுதி அடங்கிய சிப்பம்-IIக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க ரூ.54.75 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 19.01.11ல் நான்காம் அழைப்பில் ஒப்பந்தம் கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் வருமாறு.

1. M/s.Vishwa Infra structure and services Ltd., Hyderabad.
2. M/s. UEM India Pvt Ltd., Noida.
3. M/s.Ramkey Infrastructure Ltd – Abiram Infra Projects Pvt Ltd., JV Hyderabad.
4. M/s.RAUS construction Pvt Ltd., V.Ramarao-JV, Hyderabad.
5. M/s. Tebarali Industries & Project Pvt Ltd.,-Aster Pvt Ltd., Hyderabad.

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதியை பரிசீலனை செய்து தக்க ஒப்புதல் பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அலுவலக தொழில் நுட்ப நிலைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகளை 15.2.11ல் பரிசீலித்து கீழ்கண்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன்படி கீழ்கண்டுள்ள நிறுவனங்கள் அளித்துள்ள விலை விகிதம் பின்வருமாறு.

| வ.எண் | பெயர் | அளித்துள்ள விலை விகிதம் ரூ. | மதிப்பீட்டை விட அதிகம் |
|---|---|---|---|
| L- 1 | M/s.Vishwa Infra structure and services Ltd., Hyderabad | 520016919.53 | (+) 13.09% |
| L- 2 | M/s.RAUS construction Pvt Ltd., V.Ramarao-JV, Hyderabad | 529342624.37 | (+) 15.12% |
| L- 3 | M/s.Ramkey Infrastructure Ltd – Abiram Infra Projects Pvt Ltd., JV Hyderabad. | 665274305.36 | (+) 44.68% |
| L- 4 | UEM India Pvt Ltd., Noida. | 1355607901.00 | (+) 194.82% |

மேற்கண்ட ஒப்பந்துபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் விஸ்வா இன்பரா ஸ்ரக்சர் பி.லிட்., ஹைதராபாத் நிறுவனத்தார் அளித்திருந்த வங்கி உத்திரவாதம் 16.10.11ல் முடிவடைவதாலும் 15.9.11-ல் நிறுவனத்தாரிடம் அவர் அளித்த விலை விகிதத்திற்கு கால நீட்டிப்பும் வங்கி உத்திரவாதத்திற்கு கால நீட்டிப்பும் கோரியதில் அன்னார் தனது 2.9.2011ம் தேதிய கடிதத்தில் நாங்கள் அளித்த விலை விகிதங்களை கால நீட்டிப்பு செய்ய இயலாது எனவும் இதற்காக அளித்த வங்கி உத்திரவாதத்தை திரும்ப வழங்கவேண்டுமென்று தெரிவித்து விட்டதால் இதற்கடுத்த நிலையில் உள்ள திருவாளர் ஆர்.ஏ.யு.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன் - வி.ராமாராவ், ஹைதராபாத் நிறுவனத்தாரிடம் இப்பணிக்கு எல்-1 வழங்கிய விலை விகிதத்திற்கு மேற்கண்ட பணியை செய்ய இயலுமா என்று கேட்கப்பட்டது. அன்னார் தனது 14.10.11 தேதிய கடிதத்தில் இப்பணியை எல்-1 விலை விகிதம் (+)13.09% தொகைக்கே செய்து தர சம்மதித்துள்ளார். எனவே இதன் மீது முடிவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

1) மேற்கண்ட பணி திட்டப்பணியாக இருப்பதாலும், உரிய காலத்தில் பணிமுடிக்க வேண்டியிருப்பதாலும் L1 ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி செல்லுபடி காலம் 16.10.2011 உடன் முடிவடைந்து விட்டதாலும், L1 ஒப்பந்ததாரர் வழங்கிய விலை விகிதத்தின்படி (+13.09%) L2 ஒப்பந்ததாரர் M/s.RAUS Construction Pvt Ltd., - Ramarao-JV, Hyderabad அவர்கள் செய்து கொடுக்க சம்மதம் தெரிவித்திருப்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்தப்புள்ளி நிலைக்குழுவின் ஒப்புதல் பெறவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) இத்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் கூடுதலாகும் தொகையினை அரசு மானியம், நிதி நிறுவன கடன் பெறவும் அல்லது மாநகராட்சி நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**பா.சா.தி/7587/10**

**240. ஒத்திவைக்கப்பட்டது.**

**4.** இம்மாநகராட்சிக்குட்பட்ட காந்திஜி சாலை மகப்பேறு மருத்துவமனையில் ஏற்கனவே உள்ள 7.5 கே.வி.ஏ ஜெனரேட்டர் செட்டினை சர்வீஸ் செய்து புதிய பேட்டரி பொருத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.25,000-க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ3-11088-11**

**241. அனுமதி வழங்கப்பட்டது.**

**5.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான நேதாஜி சாலையில் கட்டப்பட்டுள்ள புதிய வணிக வளாகக் கடை உரிமதாரர்கள் கீழ்காணும் விபரப்படி மாத வாடகையினை செலுத்தாமல் உள்ளனர்.

| வ. எண். | குத்தகைதாரர் பெயர் | கடை எண்கள் | மாத வாடகை | நிலுவை மாதம் | செலுத்த வேண்டிய வாடகை மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | டி.கிருஷ்ணமூர்த்தி | 10 | 8700 | 4-11 – 12-11 | 78,000- |
| 2. | எஸ். சுந்தரேசன் | 11 | 19000 | 4-11 – 12-11 | 1,71,000- |
| 3. | ஜி. தனசேகரன் | 18 | 9200 | 4-11 – 12-11 | 82,800- |
| 4. | பி. விஷ்ணுவர்த்தன் | 20 | 9550 | 4-11 – 12-11 | 85,950- |
| 5. | எஸ். பாலாஜி | 25 | 8500 | 4-11 – 12-11 | 76,500- |
| 6. | எஸ். தங்கராஜ் | 26 | 14100 | 4-11 – 12-11 | 1,26,900- |
| 7. | எஸ். நந்தகுமார் | 32 | 5000 | 4-11 – 12-11 | 45,000- |
| 8. | பி. விஷ்ணுவர்த்தன் | 43 | 11750 | 4-11 – 12-11 | 1,05,750- |
| 9. | எஸ். பாலாஜி | 55 | 5950 | 4-11 – 12-11 | 53,550- |

மேற்படி வாடகையினை செலுத்த கோரி குத்தகைதார்களுக்கு இவ்வலுவலக ந.க.எண். அ2-4834-06 நாள் 23.05.11, 06.06.11, 11.07.11, 15.07.11, மற்றும் 09.08.11 ஆகிய கடிதங்கள் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேலும் வாடகை செலுத்தாத விபரம் மாமன்றத்திற்கு தெரிவித்து மேற்படி குத்ததகைதாரர்களின் உரிமத்தை ரத்து செய்ய மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட்டது.

மாமன்றம் தனது தீர்மானம் எண். 428 நாள் 30.06.11 மற்றும் 627 நாள் 29.08.11ல் மேற்படி குத்தகைதார்கள் செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத் தொகையை அவர்கள் செலுத்தியுள்ள வாடகை முன்பணத் தொகையிலிருந்து சரி செய்துகொள்ளவும், மீ்ண்டும் கால அவகாசம் வழங்கப்பட்டது. அதன்படி குத்தகைதார்களுக்கு கால அவகாசம் வழங்கியும், சரிகட்டப்பட்ட தொகையையும், வாடகை தொகையையும் மீண்டும் செலுத்த இவ்வலுவலக கடிதங்கள் நாள் 15.11.11 மற்றும் 08.12.11 ஆகிய தேதிகளில் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் நிலுவை வாடகை மற்றும் நடப்பு மாதம் வரை வாடகை செலுத்த எவரும் முன்வரவில்லை. எனவே மாநகராட்சி பொதுஏல நிபந்தனைகளின்படி குத்தகைதார்களுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்து மேற்படி கடைகளுக்கு செலுத்தியுள்ள வாடகை முன்பணத்தில்

நிலுவை வாடகையை சரி செய்து கொள்ளவும், மீதம் உள்ள முன்பணத் தொகையை பறிமுதல் செய்து கடைகளை மீண்டும் பொது ஏலம் விடம் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.்.

அலுவலகக் குறிப்பு-

மேற்காணும் கடை உரிமதார்களுக்கு மாமன்றம் வாடகை நிலுவையினை செலுத்த கால அவகாசம் வழங்கியும், வாடகையை செலுத்த முன்வராத காரணத்தால் மேற்படி கடையின் குத்தகைதார்களுக்கு வழங்கிய உரிமத்தை ரத்து செய்யவும், வாடகை முன் பணத்தொகை முழுவதும் பறிமுதல் செய்யவும் மேற்படி கடைகளை மறுபொது ஏல நடவடிக்கை மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**அ2-4834-06**

**242. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**6.** ஈரோடு மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. சிப்பம்-3 கழிவுநீர் நீரேற்று நிலையம் எண்.7 அமைக்க மாணிக்கம்பாளையம் வீட்டு வசதி குடியிருப்பு பகுதியின் அருகில் இடம் தேர்வு செய்யப்பட்டு பணியினை அவ்விடத்தில் மேற்கொள்ளும்போது அப்பகுதியில் உள்ள அண்ணாநகர் வீட்டு வசதி வாரிய குடியிருப்போர் நல சங்கத்தினர் எதிர்ப்பு தெரிவித்தனர். பொதுமக்களின் கோரிக்கையின் படி வருவாய் கோட்டாட்சியர் ஆய்வு செய்து மாவட்ட ஆட்சியருக்கு சமர்ப்பித்த அறிக்கையில் பொதுமக்கள் நலனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் மேற்கண்ட பணியை செய்ய வேண்டாம் எனவும் மாற்று இடம் தேர்வு செய்ய தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான பெரியசேமூர் கிராமம் சர்வே எண். 486-4ஈ 5பி, 6பி 35.78 சென்ட் இடம் தேர்வு செய்யப்பட்டது. இந்த இடமானது மாணிக்கம்பாளையம் பகுதியில் அமைக்கப்பட வேண்டிய நீரேற்று நிலையத்திற்கு ஏற்ற வகையில் உள்ளதால் மேற்படி இடத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து விலைக்கு வாங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு-

1. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து மேற்படி 35.78 சென்ட் இடத்தை விலைக்கு வாங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**பா.சா.தி-21927-06**

**243. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**7.** ஈரோடு மாவட்டத்தில் 05.11.11 முதல் தொடர்ச்சியாக பெய்த கனமழையின் காரணமாக ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-3ல் சூரம்பட்டி வலசிலிருந்து காசிபாளையம், முத்தம்பாளையம் வீட்டு வசதிவாரியம் செல்லும் வழியில் அமைந்துள்ள பாலத்தில் அணைக்கட்டு பகுதியிலிருந்து மழை வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட ஆகாயதாமரை செடிகள், புல் மற்றும் புதர்கள் பாலத்தின் குறுக்காக அமைந்துள்ள தூண்களில் சிக்கி அடைப்பு ஏற்பட்டதன் காரணமாக மழைவெள்ளம் ஓடைப்பகுதியின் அருகில் உள்ள வீடுகளில் வெள்ள நீர் புகுந்து வெள்ள அபாயம் ஏற்பட்டது. எனவே போர்கால அடிப்படையில் பாலத்தின் தூண்களில் அடைப்பட்டுள்ள ஆகாயதாமரை செடிகளை உடனடியாக அகற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

எனவே இப்பணியினை உடனடியாக வெளியாட்கள் மற்றும் ஜே.சி.பி ஹிட்டாச்சி (சிறியது மற்றும் பெரியது) ஆகிய இயந்திரங்கள் பயன்படுத்தி அப்புறப்படுத்திய வகைக்கு ஏற்பட்ட செலவினம் ரூ.1,49,000-ஐ மாநகராட்சி சட்டம் பிரிவு-15ன் கீழ் மேற்கொண்டு பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**அ1-806-11**

## 244. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**8.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட இந்தியா மார்க்-II வகை கைபம்புகள் பராமரிப்புகள் மற்றும் சிறுமின்விசை மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.70 இலட்சத்திற்கு இம்மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் 9.12.11 அன்று முன் அனுமதி பெற்று 22.12.2011 அன்று E-Tendering மூலம் முதல் முறையாக வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்பு நோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு:

1. திருவாளர் எஸ்.வி அன் கோ (-) 0.14 % மதிப்பீட்டை விட குறைவு

மேற்படி ஒப்பந்ததாரர் திருவாளர் எஸ்.வி அன் கோ மட்டும் 1% டேவணித் தொகையாக வங்கி நிரந்தர வைப்புத் தொகை பத்திரமாக செலுத்தியுள்ளார்

எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (-0.14%) திருவாளர் எஸ்.வி அன் கோ அவர்களிடம் மேலும் விலையை குறைத்து கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ந.க.எண். இ2/10735/2011, நாள்: 22.12.2011-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 23.12.2011 தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திருவாளர் எஸ்.வி அன் கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (-) 0.14% குறைவான விலைவிகிதம் உள்ளபடியால் இதனை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ2/10735/11**

## 245. மாமன்றம் அனுமதிக்கப்பட்டது.

**9.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1க்குட்பட்ட குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் வால்வு பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.70 இலட்சத்திற்கு இம்மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் 9.12.11 அன்று முன் அனுமதி பெற்று 22.12.2011 அன்று E-Tendering மூலம் முதல் முறையாக வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்பு நோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு:

1. திருவாளர் எஸ்.வி அன் கோ (-) 0.02 % மதிப்பீட்டை விட குறைவு

மேற்படி ஒப்பந்ததாரர் திருவாளர் எஸ்.வி அன் கோ மட்டும் 1% டேவணித் தொகையாக வங்கி நிரந்தர வைப்புத் தொகை பத்திரமாக செலுத்தியுள்ளார்

எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (- 0.02%) திருவாளர் எஸ்.வி அன் கோ அவர்களிடம் மேலும் விலையை குறைத்து கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ந.க.எண்.இ2/11652/2011, நாள்: 22.12.2011-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 23.12.2011 தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திருவாளர் எஸ்.வி அன் கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (-) 0.02% குறைவான விலைவிகிதம் உள்ளபடியால் இதனை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ2/11652/11**

## 246. மாமன்றம் அனுமதிக்கப்பட்டது.

**10.** இம்மாமன்ற 2.9.11 தேதிய 359-ஆம் எண் தீர்மானம் ஒப்புதல் பெற்றுள்ள மாதவவீதி குறுக்கு சந்திலிருந்து டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை மெயின்ரோடு வரை சாலை மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.2.75 இலட்சம் மதிப்பீட்டில் பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்தி தார் சாலைஅமைக்கும் பணிக்கு 22.12.2011 அன்று E-Tendering மூலம் முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்பு நோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு:

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள். கோல்டன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | (+) 4.96 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | கே.அமுதா | (+) 4.91 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்கள் 1% டேவணித் தொகையாக வங்கி நிரந்தர வைப்புத் தொகை பத்திரமாக செலுத்தியுள்ளார்கள்.

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், மதிப்பீட்டை விட (+) 4.91% அதிகமான விலைவிகிதம் கொடுத்துள்ள கே.அமுதா ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ம.எண்.117/2011-12 இ1/7760/2011, நாள்: 22.12.2011-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 23.12.2011 தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவ இனம் எண்.1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது மதிப்பீட்டை விட (-) 0.11% குறைவான விலை விகிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.11% குறைவான விலை விகிதம் அளித்துள்ள கே.அமுதா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.11% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள கே.அமுதா ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/7760/11**

**247. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**11.** இம்மாமன்ற 2.9.11 தேதிய 359-ஆம் எண் தீர்மானம் ஒப்புதல் பெற்றுள்ள கோவலன் வீதிக்கு ரூ.4.10 இலட்சம் மதிப்பீட்டில் பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்தி தார் சாலைஅமைக்கும் பணிக்கு 22.12.2011 அன்று E-Tendering மூலம் முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்பு நோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு:

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள். கோல்டன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | (+) 4.97 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | கே.அமுதா | (+) 4.93 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்கள் 1% டேவணித் தொகையாக வங்கி நிரந்தர வைப்புத் தொகை பத்திரமாக செலுத்தியுள்ளார்கள்.

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், மதிப்பீட்டை விட (+) 4.93% அதிகமான விலைவிகிதம் கொடுத்துள்ள கே.அமுதா ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ம.எண்.116/2011-12 இ1/7760/2011, நாள்: 22.12.2011-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 23.12.2011 தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவ இனம் எண்.1,2 மற்றும் 3 ஆகிய இனங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது மதிப்பீட்டை விட (-) 0.15% குறைவான விலை விகிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்

மதிப்பீட்டை விட (-) 0.15% குறைவான விலை விகிதம் அளித்துள்ள கே.அமுதா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.15% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள கே.அமுதா ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/7760/11**

## 248. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**12.** இம்மாமன்ற 2.9.11 தேதிய 359-ஆம் எண் தீர்மானம் ஒப்புதல் பெற்றுள்ள கோவலன் வீதி-2, 3 மற்றும் வீரமாமுனிவர் குறுக்கு வீதிகளுக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்தி தார் சாலைஅமைக்கும் பணிக்கு 22.12.2011 அன்று E-Tendering மூலம் முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்பு நோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு:

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள். கோல்டன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | (+) 4.99 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | கே.அமுதா | (+) 4.94 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்கள் 1% டேவணித் தொகையாக வங்கி நிரந்தர வைப்புத் தொகை பத்திரமாக செலுத்தியுள்ளார்கள்.

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், மதிப்பீட்டை விட (+) 4.94% அதிகமான விலைவிகிதம் கொடுத்துள்ள கே.அமுதா ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ம.எண்.112/2011-12 இ1/7760/2011, நாள்: 22.12.2011-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 23.12.2011 தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவ இனம் எண்.1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது மதிப்பீட்டை விட (-) 0.04% குறைவான விலை விகிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.04% குறைவான விலை விகிதம் அளித்துள்ள கே.அமுதா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.04% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள கே.அமுதா ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/7760/11**

## 249. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**13.** இம்மாமன்ற 2.9.11 தேதிய 359-ஆம் எண் தீர்மானம் ஒப்புதல் பெற்றுள்ள மாதவவீதி குறுக்கு சந்திலிருந்து டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை மெயின்ரோடு வரை சாலை மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.2.75 இலட்சம் மதிப்பீட்டில் பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்தி தார் சாலைஅமைக்கும் பணிக்கு 22.12.2011 அன்று E-Tendering மூலம் முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்பு நோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு:

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள். கோல்டன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | (+) 4.96 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | கே.அமுதா | (+) 4.91 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்கள் 1% டேவணித் தொகையாக வங்கி நிரந்தர வைப்புத் தொகை பத்திரமாக செலுத்தியுள்ளார்கள்.

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், மதிப்பீட்டை விட (+) 4.91% அதிகமான விலைவிகிதம் கொடுத்துள்ள கே.அமுதா ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ம.எண்.117/2011-12 இ1/7760/2011, நாள்: 22.12.2011-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 23.12.2011 தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவ இனம் எண்.1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது மதிப்பீட்டை விட (-) 0.11% குறைவான விலை விகிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.11% குறைவான விலை விகிதம் அளித்துள்ள கே.அமுதா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.11% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள கே.அமுதா ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/7760/11**

## 250. இரட்டைப்பதிவு இப்பொருள் ரத்து செய்யப்படுகிறது.

**14.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட இந்தியா மார்க்-II வகை கைபம்புகள் பராமரிப்புகள் மற்றும் சிறுமின்விசை மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு இம்மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் 9.12.11 அன்று முன் அனுமதி பெற்று 22.12.2011 அன்று E-Tendering மூலம் முதல் முறையாக வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்பு நோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு:

1. திரு ஏ.செல்வராஜ் (-) 0.04 % மதிப்பீட்டை விட குறைவு

மேற்படி ஒப்பந்ததாரர் திரு ஏ.செல்வராஜ் மட்டும் 1% டேவணித் தொகையை மாநகராட்சி கருவூலகத்தில் தொகையாக செலுத்தியுள்ளார்.

எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (- 0.04%) திரு ஏ.செல்வராஜ் அவர்களிடம் மேலும் விலையை குறைத்து கொடுக்க இயலுமா என இவ்வலுவலக இ2/10735/2011, நாள்: 22.12.2011-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 23.12.2011 தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு ஏ.செல்வராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (-) 0.04% குறைவான விலைவிகிதம் உள்ளபடியால் இதனை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ2/10735/11**

## 251. அனுமதி வழங்கப்பட்டது.

**15.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் வால்வு பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.80 இலட்சத்திற்கு இம்மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் 9.12.11 அன்று முன் அனுமதி பெற்று 22.12.2011 அன்று E-Tendering மூலம் முதல் முறையாக வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்பு நோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு:

1. திரு ஏ.செல்வராஜ் (-) 0.08% மதிப்பீட்டை விட குறைவு

மேற்படி ஒப்பந்ததாரர் திரு ஏ.செல்வராஜ் மட்டும் 1% டேவணித் தொகையை மாநகராட்சி கருவூலகத்தில் தொகையாக செலுத்தியுள்ளார்.

எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (- 0.08%) திரு ஏ.செல்வராஜ் அவர்களிடம் மேலும் விலையை குறைத்து கொடுக்க இயலுமா என இவ்வலுவலக இ2/11652/2011, நாள்: 22.12.2011-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 23.12.2011 தேதிய கடிதத்தில்

ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு ஏ.செல்வராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (-) 0.08% குறைவான விலைவிகிதம் உள்ளபடியால் இதனை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ2/11652/11**

## 252. அனுமதிக்கப்பட்டது.

**16.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4க்குட்பட்ட சிறுமின்விசை மோட்டார் மற்றும் நீருந்து நிலைய மின்மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.4.80 இலட்சத்திற்கு இம்மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் 9.12.11 அன்று முன் அனுமதி பெற்று 22.12.2011 அன்று E-Tendering மூலம் முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்பு நோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு:

1. திருவாளர் அசோக்ராஜா அன் கோ (-) 0.12 % மதிப்பீட்டை விட குறைவு

2. திருவாளர் சாந்தி அன் கோ (-) 2.99 % மதிப்பீட்டை விட குறைவு

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களில் திருவாளர் அசோக்ராஜா அன் கோ மட்டும் 1% டேவணித் தொகையாக வங்கி நிரந்தர வைப்புத் தொகை பத்திரமாக செலுத்தியுள்ளார். ஆனால் திருவாளர் சாந்தி அன் கோ அவர்கள் 1% டேவணித் தொகை ஏதும் செலுத்தப்படவில்லை.

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், மதிப்பீட்டை விட (-) 2.99% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர் சாந்தி அன் கோ அவர்கள் ஒப்பந்த விதிகளின்படி 1% டேவணித் தொகை செலுத்தாத காரணத்தால் அவரது ஒப்பந்தப்புள்ளி தகுதி இழந்ததால் இரண்டாவதாக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (- 0.12%) திருவாளர் அசோக்ராஜா அன் கோ அவர்களிடம் மேலும் விலையை குறைத்து கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ந.க.எண். இ2/10735/2011, நாள்: 22.12.2011-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 23.12.2011 தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் உள்ள சில இனங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட மேலும் குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது மதிப்பீட்டை விட (-) 3.15% குறைவான விலை விகிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதியுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திருவாளர் அசோக்ராஜா அன் கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (-) 3.15% குறைவான விலைவிகிதம் உள்ளபடியால் இதனை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ2/10735/11**

## 253. அனுமதிக்கப்பட்டது.

**17.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4க்குட்பட்ட முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு Phase-I-ல் (H-Type C type Roads) பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்தி தார் சாலை அமைக்கும் பணிக்கு காசிபாளையம் நகராட்சி 30.8.11-ம் தேதிய 615-ம் தீர்மானத்தில் மதிப்பீட்டுத் தொகை ரூ.14.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிக்கு 22.12.2011 அன்று E-Tendering மூலம் முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்பு நோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு:

1. திரு கே.முருகேசன் (+) 4.99 % மதிப்பீட்டை விட அதிகம்

2. திரு டி.வேலுசாமி (+) 4.92 % மதிப்பீட்டை விட அதிகம்

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்கள் 1% டேவணித் தொகையாக மாநகராட்சியில் தொகையாக செலுத்தியுள்ளார்.

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், மதிப்பீட்டை விட (+) 4.92% அதிகமான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு டி.வேலுசாமி ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையை

குறைத்துக் கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ம.எண்.114/2011-12 இ1/7760/2011, நாள்: 22.12.2011-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 23.12.2011 தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவ இனம் எண்.1,2,3 மற்றும் 4 ஆகிய இனங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது மதிப்பீட்டை விட (-) 0.03% குறைவான விலை விகிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.03% குறைவான விலை விகிதம் அளித்துள்ள திரு டி.வேலுசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.03% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு டி.வேலுசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ம.எண்.114-11-12**

## 254. அனுமதிக்கப்பட்டது.

**18.** இம்மாமன்ற தனது 29.08.11 தேதிய 582 ஆம் எண் தீர்மானத்தில் ஒப்புதல் பெற்றுள்ள ஜெயகோபால் வீதிக்கு ரூ. 6.50 இலட்சம் மதிப்பீட்டில் பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்தி தார் சாலைஅமைக்கும் பணிக்கு 22.12.2011 அன்று E-Tendering மூலம் முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்பு நோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு:

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்கள். எஸ்.வி.அன் கோ | (+) 4.93 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | திரு டி.வேலுசாமி | (+) 4.97 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்கள் 1% டேவணித் தொகையாக வங்கி நிரந்தர வைப்புத் தொகை பத்திரமாக செலுத்தியுள்ளார்கள்.

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், மதிப்பீட்டை விட (+) 4.93% அதிகமான விலைவிகிதம் கொடுத்துள்ள M/s. எஸ்.வி அன் கோ ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ம எண். 115/2011-12 இ1/7760/2011, நாள்: 22.12.2011-ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 23.12.2011 தேதிய கடிதத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவ இனம் எண்.1,2,3 மற்றும் 4 ஆகிய இனங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள விலையை விட குறைத்து கொடுத்துள்ளார். அவ்வாறு குறைத்து கொடுத்த விலையைக் கொண்டு மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது மதிப்பீட்டை விட (-) 0.11% குறைவான விலை விகிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.11% குறைவான விலை விகிதம் அளித்துள்ள திருவாளர்கள். எஸ்.வி அன் கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.11% குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள M/s. எஸ்.வி அன் கோ ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளிக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/7760/11**

## 255. அனுமதி வழங்கப்பட்டது.

**19.** ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான காவேரி ஆற்றங்கரையோரமுள்ள எரிகாட்டில் இறந்தவர்களின் உடலை எரிப்பதற்கான மேற்கூரையுடன் கூடிய எரிமேடை ஆறு எண்ணிக்கை உள்ளது. இதில் ஐந்து எரிமேடையின் தகர மேற்கூரை எரிக்கும்போது ஏற்படும் வெப்பத்தின் காரணமாக உடைந்து சிதலமடைந்தும் உள்ளது. இதன் காரணமாக மழைக்காலங்களில் இறந்தவர்களின் உடலை எரிமேடையில் எரிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே பழுதடைந்துள்ள எரிமேடையின் மேற்கூரையினை அகற்றிவிட்டு புதியதாக கனமுள்ள துருப்பிடிக்காத GI Sheet கூரை அமைப்பதற்கும் மற்றும்

எரிமேடையின் அருகில் காரியங்கள் செய்ய தண்ணீர் வசதி செய்யவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.65000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

இ1/334/10

## 256. அனுமதி வழங்கப்பட்டது.

**20.** இம்மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் மற்றும் மாநகரப் பொறியாளர் அவர்களின் அலுவலக அறையில் பயன்பாட்டிலுள்ள ஜெராக்ஸ் இயந்திரங்களுக்குத் தேவையான 6210டி மற்றும் சி3300 மாடல் டோனர்கள் 10 எண்ணிக்கைகளை ரீக்கோ நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பிரைட் மார்கெட்டிங் கம்பெனி திருப்பூர் நிறுவனத்தில் நேரிடையாக வாங்குவதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 95,000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ3/3571/11

## 257. அனுமதிக்கப்பட்டது.

**21.** ஈரோடு மாநகராட்சி பேருந்து நிலையத்தில் பயணிகளின் சவுகரியத்தை முன்னிட்டு பேருந்துகள் நிற்குமிடம், புறப்படும் நேரம் ஆகிய தகவல்களையும், அடிப்படை வசதிகள் அமைந்துள்ள இடங்களையும் பயணிகள் அறிந்து கொள்ளும் பொருட்டு Public addressing system அமைப்பை ஏற்படுத்த வேண்டியுள்ளது. எனவே பேருந்து நிலையத்தில் அனைத்து பகுதிகளிலும் சேர்த்து 25 எண்ணிக்கை Speaker மற்றும் அதற்கு தேவையான Microphone, Amplifier, DVD player உள்ளிட்ட உபகரணங்களை பொருத்தியும் அதற்கு தேவையான ஒயரிங் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.10 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

இ3/4500/11

## 258. அனுமதி வழங்கப்பட்டது.

**22. 30-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. K. லட்சுமி அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்**

காந்திபுரம்-1, ராஜாஜிபுரம் சந்திப்புகளில் கல்வெட்டு பாலம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

சகன் வீதியில் உள்ள சின்டெக்ஸ் டேங்க்கிலிருந்து அருகிலுள்ள ஜானகி அம்மாள் லேஅவுட் பகுதி டீக்கடையை தாண்டி குழாய் நீடிப்பு செய்து தண்ணீர் வசதிசெய்து தருதல், புதிய குடிநீர் இணைப்பு அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

ராஜாஜிபுரத்தில் போரிங் பைப் பொது வழிப் பாதையில் உள்ளது. வாகனங்கள் செல்வதற்கு இடையூறாக உள்ளதால் அதனை அகற்றி விட்டு அதே பகுதியில் நகராட்சி நடுநிலைப் பள்ளி அருகில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குழாய் நீடிப்பு செய்து தண்ணீர் வசதி செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

ராஜாஜிபுரத்தில் பொது குடிநீர் இணைப்பு உள்ள பகுதிகளில் பைப்புகளை சரி செய்து அதற்கு கேட் வால்வு பொருத்தி குடிநீர் இணைப்புள்ள பகுதிகளுக்கு சிமெண்ட் தளம் அமைக்க, தண்ணீர் சீராக சாக்கடையில் செல்லுமாறு அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

மில் வீதியில் கூலிப் பணியாளர்கள் அதிக அளவில் பயன்படுத்தக்கூடிய பகுதியாக உள்ளது. நீண்ட காலமாக தார்சாலை பழுதடைந்து உள்ளது. அப்பகுதிக்கு தார்சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

வரகப்ப வீதியில் சகன் வீதிக்கு இடையே உள்ள சந்தில் பழைய துணிக்கடை பாய் வீட்டு அருகில் புதியதாக மின்கம்பம் அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

வரகப்ப வீதியில் மின்மோட்டார் மூலம் சின்டெக்ஜ் டேங்க் அமைத்து டேங்கிலிருந்து குழாய் நீடிப்பு செய்து தண்ணீர் வசதி செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

## வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் பெயர் சேர்க்க வேண்டியவர்கள் விவரம்

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | வயது |
|---|---|---|
| 1. | ஏ. சரோஜா, க/பெ. ஆறுமுகம்,<br>113, சகன் வீதி, ஈரோடு | 35 |
| 2. | ஏ. ஜீவா, க/பெ. எல்லப்பன்,<br>113, சகன் வீதி, ஈரோடு | 58 |
| 3. | எஸ்.ஆர். அருணாச்சலம், த/பெ. ராமசாமி,<br>27, சகன் வீதி, செல்லம்மாள் வீடு, ஈரோடு | 70 |
| 4. | என். ஜிமினா, த/பெ. நன்னாசாஹிப்,<br>506, ராஜாஜிபுரம், ஈரோடு | 55 |
| 5. | வி. சத்தியமூர்த்தி, த/பெ. வீராசாமி,<br>55, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 44 |
| 6. | எம். நியாசுதின், த/பெ. முன்வர்ஜான்,<br>36, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 45 |
| 7. | வி. பழனியம்மாள், க/பெ. வேலுசாமி,<br>231, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 65 |
| 8. | எப்.ஏ. நியாமத்துல்லா, த/பெ. அகமது சாஹிப்,<br>11, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 64 |
| 9. | எஸ். பாசுபாய், த/பெ. சந்தாசாஹிப்,<br>106, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | |
| 10. | ஒய். மெகருன்னிசா, க/பெ. சையதுஆஜம்,<br>36, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 65 |
| 11. | ஜொஹராமா, க/பெ. இப்ராஹிம்,<br>59, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 65 |
| 12. | மும்தாஜ், க/பெ. அப்துல்சமீது,<br>90, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 60 |
| 13. | ஹபிபா, க/பெ. உஸ்மான்கான்,<br>24, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 60 |
| 14. | குர்ஷித், க/பெ. தஸ்தகீர்,<br>100, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 64 |
| 15. | ஜான்பீபி, க/பெ. அமீத்கான்,<br>313, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 65 |
| 16. | முகமது எஹயா, த/பெ. அப்துல் ரகுமான்,<br>106, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | |
| 17. | முஸ்தபா, த/பெ. யாகூப்,<br>15, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 55 |
| 18. | அமீத்கான், த/பெ. காதர்கான்,<br>313, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 75 |
| 19. | அஹரப்புனிதா, க/பெ. சாகுல்அமீது,<br>27/1, கே.என்.கே. ரோடு, ஈரோடு. | |
| 20. | மல்லிகா, க/பெ. ராஜு,<br>66, சகன் வீதி, ஈரோடு. | 55 |
| 21. | கே. அபிராமி, த/பெ. கன்னியப்பன்,<br>110, ஆலமரத்துச்சேரி, ஈரோடு. | 28 |
| 22. | கே. மீனாட்சி, த/பெ. கன்னியப்பன்,<br>110, ஆலமரத்துச்சேரி, ஈரோடு. | 27 |
| 23. | மாமுதாபீபி, க/பெ. யாகூப்,<br>ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | |
| 24. | எம். ரபீக்அலி, த/பெ. முகமது இஸ்மாயில்,<br>ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | |

| | | |
|---|---|---|
| 25. | தனலட்சுமி, க/பெ. செல்வம்,<br>53, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 48 |
| 26. | அல்லாபாக்ஸ், த/பெ. மஸ்தான்,<br>14/57, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 70 |
| 27. | ஆர். அமீர்பாஷா, த/பெ. ரசூல்,<br>89, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 30 |
| 28. | அமீதாபீபி, க/பெ. சாகுல்ஹமீது,<br>8/11, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 55 |
| 29. | சாதிக்பாட்சா, த/பெ. அல்லாபாக்ஸ்,<br>82, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 45 |
| 30. | ருக்குமணி, க/பெ. அய்யாசாமி,<br>54/55, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 61 |
| 31. | மீராசாஹிப், த/பெ. காதர்ஷா,<br>155, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 60 |
| 32. | சலாம், த/பெ. கௌஸ்மைதீன்,<br>57, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 28 |
| 33. | ஜக்கியாபேகம், க/பெ. சௌகத்அலி,<br>58, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 50 |
| 34. | சையது முஸ்தபா, த/பெ. சௌகத்அலி,<br>10, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 27 |
| 35. | பி. கமால், த/பெ. பக்கிர்அகமது,<br>30, ஜானகியம்மாள் லே-அவுட், ஈரோடு. | 60 |

**259. 30ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.கே. லட்சுமி அவர்களால் முன்மொழியப்பட்டு 60ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. மோ.வீ.வெங்கட் அவர்களால் வழிமொழியப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**23.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-1 வீரப்பன் சத்திரம் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் குப்பை டிரம்கள் (Dumper Bins) 17 எண்ணிக்கைகள் பழுதடைந்து உபயோகப்படுத்தப்பட முடியாமல் உள்ளது. அதில் 6 குப்பை டிரம்கள் முற்றிலும் பழுதடைந்து உள்ளது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி 11 (Dumper Bins)-களை உடனடியாக சரி செய்ய தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1.33 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ3/11825/11**

**260. அனுமதி வழங்கப்பட்டது.**

**இடம்- ஈரோடு** **மேயர்,**

**நாள்-28.12.2011** **ஈரோடு மாநகராட்சி**